இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 18 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 11 – செவ்வாய்க்கிழமை 27 ஆகஸ்டு 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 18: Thiruvalluvar Year - 2055 - Aavani 11 - Tuesday 27 August 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## “வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்” கீழ் –

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - ரூ.115.58 கோடி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.8.2024) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மையத்தின் தலைவர் – கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தபோது, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

## ரூ.5.22 கோடி செலவில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2024) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 115.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், சமுதாய நலக் கூடம், நவீன சலவைக் கூடம், புழல், ரெட்டேரி மற்றும் கொளத்தூர் ஏரிக் கரைகளை மேம்படுத்துதல் ஆகிய 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 5.22 கோடி ரூபாய் செலவில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம், கொளத்தூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரத்தில் நவீன சலவைக் கூடம் மற்றும் 3 நியாய விலைக் கடைகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

**6 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்!**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின் கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,25,402 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரை தளத்தில் 64 கடைகளும், அலுவலக அறையும், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் 70 கடைகளும், இரண்டாம் தளத்தில் உணவு விடுதி வளாகம் உட்பட 54 கடைகளும், முற்றத்தில் மீன் வள அமைப்புகள் என மொத்தம் 188 கடைகளுடன் அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம்;

சென்னை, இராயபுரம் மூலகொத்தளத்தில் சுமார் 0.67 ஏக்கர் பரப்பளவில் 14.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41,593 சதுர அடி கட்டட பரப்பளவில் அடித்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய சமுதாய நலக்கூடம்;

சென்னை, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் சுமார் 1.04 ஏக்கர் பரப்பளவில் 11.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45,198 சதுர அடி கட்டட பரப்பளவில் தரைதளத்தில் சலவைக் கூடங்கள், இயந்திரக் கூடங்கள், துவைக்கும் கூடங்கள், உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் துணி தேய்க்கும் இடம், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், முதல் தளத்தில் துணி உலர்த்தும் இடம், என 60 அறைகள் கொண்ட நவீன சலவைக் கூடம்; புழல் ஏரிக்கரையில் சுமார் 8.17 ஏக்கர் பரப்பளவில் 16.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, இயற்கை காட்சி அமைப்புடன் கூடிய உயர்மட்ட நடைபாதை, மியாவாக்கி காடு வளர்ப்பு, குழந்தைகளுக்கான கண்காட்சி இடம், இயற்கை குளம், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும் புழல் ஏரிக்கரை;

ரெட்டேரி ஏரிக்கரையில் சுமார் 4.38 ஏக்கர் பரப்பளவில் 13.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நுழைவாயில் அரங்கம், இணைக்கும் பாலங்கள், இயற்கை தோட்டம் மற்றும் பூங்கா, நடைபாதை, சூரிய மின்கலம் கொண்ட நிழல் இருக்கைகள், உடற்பயிற்சி கூடங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும் ரெட்டேரி ஏரிக்கரை;

கொளத்தூர் ஏரிக்கரையில் சுமார் 0.4 ஏக்கர் பரப்பளவில் 6.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இயற்கை நடைபாதை, படகு சவாரி, குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, செயற்கை நீர்வீழ்ச்சி, இசை பூங்கா, ஒளிரும் மீன் சிற்பங்கள், குடிநீர் மற்றும் நவீன கழிப்பறை போன்ற அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும் கொளத்தூர் ஏரிக்கரை; என மொத்தம் 115.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**4 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!**

கொளத்தூர், நேர்மை நகரில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம், கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் தெருவில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம், சி.கே. சாலையில் 2.27 கோடி ரூபாய் செலவில் நவீன சலவைக் கூடம் மற்றும் 45 இலட்சம் ரூபாய் செலவில் 3 நியாய விலைக் கடைகள்;

என மொத்தம் 5.22 கோடி செலவில் 4 முடிவுற்றப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

## வெளிநாட்டுப் பயணம்!

# கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்துக்கு நன்றி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, ஆக.27–

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை பெற்றுக்கொண்டு, முதலமைச்சர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற நேரில் வாழ்த்து தெரிவித்ததற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**தலைவர் கலைஞரின் நெஞ்சத்தில் தனக்கெனத் தனி இடம்பெற்றவரும் என் மீது அளவற்ற அன்பு கொண்டவருமான அருமை நண்பர் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்களது வாழ்த்துக்கு நன்றி.**


இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு

# ஆன்மீகத்தை அனைவருக்கும் உரியதாக்கி வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும்!

### காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!





**சென்னை, ஆக.27-**

**“பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆன்மீகத்தை அனைவருக்கும் உரியதாக்கி வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக பழநியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்கள்.

இந்த மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய சிறப்புரை விவரம் வருமாறு:

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக பழநியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் இந்த மாநாட்டில் காணொலிக் காட்சி மூலமாக இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பேசுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

**அமைச்சர் சேகர்பாபுவிற்கு நன்றி!**

உலகம் எங்கிலும் இருந்து ஆன்மீகப் பெரியோர்கள், அடியார்கள், தமிழ் அறிஞர்கள், முருக பக்தர்கள் பங்கேற்கின்ற இந்த மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பைத் தந்த அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் சேகர் பாபு அவர்களை நம் முதலமைச்சர் அவர்கள் `செயல் பாபு' என்றுதான் பாராட்டி அழைப்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பது இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்க்கும் பொழுது புரியும். செய்தித்தாள்களை, செய்தித் தொலைக்காட்சிகளைப் பார்த்தால், அண்ணன் அவர்கள் ஏதாவது ஒரு தெரு கோவிலில் ஆய்வுசெய்து கொண்டுதான் இருப்பார்.

நம் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் கோவிலில்தான் அவர் குடியிருப்பார் என்று சொல்கிற அளவிற்கு அவரின் பணி சிறந்து விளங்குகிறது. இன்றைக்கு நம் திராவிட மாடல அரசு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில், அறநிலையத்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்